இருந்தது. ஆகவே சென்னையில் இருந்து மகாபலிபுரத்திற்கு மிதக்கும் ஹோட்டல் ஒன்றையே ஆரம்பித்தால் லாபம் வரும். அதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மிதக்கும் ஹோட்டல் என்பது சைகோன் என்ற ஒரே ஒரு இடத்தில் தான் இருக்கிறது. அதுவும் ஓடிக்கொண்டிருக்கவில்லை. ஒரே இடத்தில் தான் மிதக்கிறது. இந்தக் கப்பலைப் பற்றி முடிவு தெரிந்த பிறகு நாம் நடமாடும் ஹோட்டலாகவே ஏற்படுத்த முடியுமா என்பதை யோசிக்கலாம்.

திரு. எம். தேவராசன்: மகாபலிபுரத்திற்குப் புறப்படும் கப்பலின் வெள்ளோட்டத்தில் முதல் நாள் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கப்பல் வந்த பிறகு அதுபற்றி யோசிக்கப்படும்.

Government Rubber Plantations at Nagercoil

*812 Q.—Thiru J. JAMES: Will the Hon. the Minister for Electricity be pleased to state whether it is a fact that the Conservator of Government Rubber Plantations, Nagercoil and few of his subordinates such as Superintendents and Range Officers were made accused in a criminal case pending before the District Magistrate, Nagercoil ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: 7-2-1972-ம் தேதி நாகர் கோயில் மாவட்ட குற்றவியல் நீதிபதி, குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பு வழங்கினார்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த வழக்கில் சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் எந்த எந்த ஷரத்தின்படி இந்த அலுவலர்கள் மீது வழக்குப் போடப்பட்டது? எந்த எந்தக் குற்றங்கள் சாட்டப்பட்டன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஐ.பி.ஸி. 427, 448 செக்ஷன்கள் கீழ் குற்றம் சாட்டப்பட்டது. வழக்கு விவரம் இல்லை. இதில் கொடுக்கப்பட்ட தீர்ப்பு—

I hold without the least hesitation that the accused have not committed any offence and that they are innocent என்பதாகும்.

Thiru R. PONNAPPA NADAR: May I know from the Hon. Minister whether any State defence was arranged for these officers and what is the expenditure incurred for defence in this case ?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: எவ்வளவு செலவு என்ற விவரம் இல்லை அரசாங்க அதிகாரிகளுக்கு என்ன என்ன உதவிகள் அளிக்கப்பட வேண்டுமோ அவை வழங்கப்பட்டிருக்கின்றன.

1972 மார்ச் 30]

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த வழக்கில் சாட்சியம் அளித்த தொழிலாளர்கள் மீது இப்போது அதிகாரிகள் பழி வாங்குகிறார்கள் என்கிற புகார்கள் வந்துள்ளனவே. அவற்றின்மீது என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : என்னுடைய கவனத்திற்கு எந்த விதமான புகாரும் வரவில்லை. வந்தால் கவனிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

சுதந்திரா, பிரஜா சோஷலிஸ்ட் கட்சிகளின் பெயர் மாற்றம் குறித்து.

திரு. நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்ட மன்றத்தில் இடம் பெற்றிருக்கிற சுதந்திராக் கட்சியின் ஸ்தாபகரும் அதன் தலைவருமான திரு. ராஜாஜி அவர்கள் அந்தக் கட்சியின் பெயரை மாற்றப் போவதாக அறிவித்திருக்கிறாரே, அதுபற்றி நமது சட்டமன்றத் தலைவருக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? வந்திருந்தால் அதை அறிவிப்பார்களா என்று கேட்கிறேன்.

DR. H. V. HANDE : I am very grateful to the hon. Member for giving some publicity to the point of view expressed by my revered Leader, Rajaji. He has not mentioned anything new. We have been repeatedly saying that we are for social justice. It is not being understood properly and because of some frustration constantly whatever he says is not understood correctly. What he has said is only just what he always says in his own usual way. That has nothing to do with our Party anew.

MR. SPEAKER : 'Justice Party' என்று சொல்லலாமா ?

DR. H. V. HANDE : 'Social' must also come, for, now-a-days, only that has a market value and every party wants to call itself by that name and all the parties are calling themselves as socialist parties or something like that. Perhaps because of that he has been saying that as we are also for social justice, we should add that also. Though we do not call ourselves socialist party, we are primarily for social justice. I am very grateful to the hon. Member, Thiru Veerasamy for having brought this to the notice of the House.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, the Hon. Member Dr. Hande has expressed that for the sake of market value, they want to add the word 'socialist' to the name of his party. Would that mean that they do not really believe in Socialism, but that it is only for the purpose of market value....